தமிழால் தழைக்கும் உலகு

# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய மின்னிதழ்



மார்ச் 2024
குடில் 6
விருந்து 20

தமிழ்த்துறை
சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய மின்னிதழ்

## தமிழால் தழைக்கும் உலகு

குடில் 6

விருந்து 20

மார்ச் 2024

தமிழ்த்துறை

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

# நற்றமிழ்க்குடில்


ஆசிரியர் குழு : மோ. ஐஸ்வரியா, முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு
மா. ஜெகதீஸ்வரி, முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு
வி. மாரிகவிதா, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு
து. லீலாவதி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

ஆலோசனைக் குழு : டாக்டர் சேது குமணன், கல்லூரித் தலைவர்
முனைவர் மீரா முருகேசன், கல்லூரி முதல்வர்
முனைவர் கண்மணி சுப்பிரமணியன், கல்லூரித் துணை முதல்வர்
முனைவர் தே. இராணி எலிசபெத், தமிழ்த்துறைத் தலைவர்
தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

*Blog* : *sokatamil blogspot.com*
*Facebook* : *Soka Tamil Avai*
*Youtube* : *Sokatamilavai*
*E.mail* : *sokatamilavai2023@gmail.com*

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

## குடில் 6

## விருந்து 20

மார்ச் 2024

## உள்ளே....

தலையங்கம்

மலரே

கட்டுரை

நூல் அறிமுகம்

பழமொழி நுண்பொருள்

அறிவியல் செய்திகள்

பண்டிகை வரலாறு

பொன்மொழிகள்

சிறுகதை

கவிதைகள்

தூரிகைத் தூரல்

துறை நிகழ்வுகள்

# தலையங்கம்

## முத்துக்கண்ணம்மா

சதிர் ஆட்டத்திற்கு அதாவது கலைப்பிரிவில் மத்திய அரசின் உயரிய விருதான பத்மஸ்ரீ விருது பெற்றவர் முத்துக் கண்ணம்மா. இவர் தமிழகத்தின் பாரம்பரியக் கலையான சதிராட்டத்தை அறிந்தவர். தேவதாசி மரபின் கடைசி பெண்ணாக வாழ்ந்து வருபவர். தற்போது இவருக்கு வயது 84 ஆகிறது. அவரைப்பற்றி அறிவதன் மூலம் மறைந்த தமிழ்நாட்டின் கலையான சதிர் பற்றி அறியமுடிகிறது.



விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் விராலிமலை சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குப் பொட்டு கட்டி விடப்பட்ட 32 தேவதாசிகளுள் முத்துக் கண்ணம்மாளும் ஒருவர்.

இவர் தேவரடியாராக இருக்கும் போது காலையும் மாலையும் 200 படிகள் ஏறி கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி வர வேண்டும். முந்தைய காலக்கட்டத்தில் தேவரடியார்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. 1947ஆம் ஆண்டு தமிழ்நாடு தேவதாசிகள் ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டம் தேவரடியார்கள் திருமணம் செய்யும் உரிமையைப் பெற்றுத் தந்தது. கோயிலுக்குப் பெண்களை நேர்ந்து விடும் சட்டத்திற்குப் புறம்பானதாகக் கருதப்பட்டது.



முத்துக்கண்ணம்மா பிறந்து வளர்ந்தது விராலிமலையில். இவர்களது குடும்பம் தலைமுறை தலைமுறையாகச் சதிர் ஆடும் குடும்பம். சதிர் ஆடுவதில் முத்துக்கண்ணம்மா ஏழாவது தலைமுறை. இவர் சதிராட்டம், விராலிமலை குறவஞ்சி, வர்ணம், கும்மி, கோலாட்டம் ஆகியவற்றை அறிந்தவர்.

தேவரடியார் முறை முழுவதும் ஒழிக்கப்பட்ட பின்னர் இவர் தமிழ்நாடு மட்டுமல்லாமல் பிற மாநிலங்களுக்கும் சென்று சதிர் ஆட்டத்தை ஆடி வந்தார். கோயில் கொலு மற்றும் திருவிழா காலங்களில் மட்டுமே சதிர் ஆடப்படும்.



சதிர் ஆடுபவர்கள் தாம் சொந்தமாகப் பாடல்பாடி, சாமி உலா வரும் போது வீதியில் ஆடுவர். தேவரடியார்கள் ஆடும் சதிராட்டத்தின் முறைப்படுத்தப்பட்ட கலை வடிவமே பரதநாட்டியம் ஆகும்.

சதிராட்டத்தின் கடைசி அடையாளமாக முத்துக் கண்ணம்மாள் விளங்குகிறார். இவர் தன் பேரப்பிள்ளைகளுக்கும் சதிராட்டத்தைப் பயிற்றுவித்து வருகிறார். சதிராட்டக் கலையைக் காப்பதையே தன் கடனாகக் கொண்டு தனது 80 வயதிலும் அவரது கால்கள் ஆடுவதையும் அவரது வாய் பாடுவதையும் நிறுத்தவே இல்லை.

**மோ. ஐஸ்வரியா, முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு**


# மலரே.....

## அடும்பு



குறிஞ்சிப் பாட்டில் இடம் பெறும் 99 வகை மலர்களுள் ஒன்று அடும்பு. இது கடற்கரையில் வறண்ட மணல் பகுதியில் வளரும் தன்மையுடையது. இதற்கு ஆட்டுக்கால் அடம்பு என்ற பெயரும் உண்டு. இதன் இலைகள் ஆட்டின் கால்களைப் போன்ற தோற்றம் உடையதால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. இதன் இலைகள் கடினமாகவும், பூக்கள் நீல நிறத்திலும் இருக்கும். இக்கொடி மண் அரிப்பைத் தடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இதன் அடியில்

வலிமையான நீண்ட கிழங்கு இருக்கும். இது விளைநிலத்தின் உவர்த் தன்மையைச் சமப்படுத்தும் தன்மையுடையது.



இது அடும்பு, அடம்பு, அடப்பங்கொடி, அடும்புக்கொடி எனப் பலப்பெயர்களில் வழங்கப்படுகிறது. அரிய வகை மருத்துவ மூலிகையாகவும் பயன்படுத்தப்படுகிறது. சித்த மருத்துவத்தில் இதனைக் கடலோரை, காட்டாரை என்கின்றனர்.

**குன்றோங்கு வெண்மணல் கொடியடும்பு கொய்தும் – நற் 254**

மணல் போல் உயர்ந்த வெள்ளை நிற மணல் மேட்டிலே படரும், கொடி அடும்பின் பூவினைப் பறித்து எனப் பொருள்படும் நற்றிணைப் பாடல் வழி அடும்பு மலர் நெய்தல் நிலப்பகுதியில் வளர்வது என்பது தெரியவருகிறது.

**அடும்புங் கொன்றையும் வன்னியும் மத்தமும்**

**துடும்பல் செய்சடைத் தூமணிச் சோதியான – (5.84.6)**

என்னும் திருமறைப் பாடல் மூலம் சிவபெருமான் தன் சடையில் அடும்பு மலரைச் சூடினார் என்பதை அறியமுடிகிறது.

**அடம்பங் கொடி திரண்டால் மிடுக்கு**

என்ற பழமொழி வலிமையை வலியுறுத்த வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இம்மலர் பற்றிய குறிப்புகள் நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, பட்டினப்பாலை, அகநானூறு, குறிஞ்சிப்பாட்டு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பொருநராற்றுப்படை ஆகிய சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரத்திலும் இடம்பெற்றுள்ளது.

**து. லீலாவதி, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு**

# கட்டுரை

## லூயி பிரெயில் (1809-1852)

லூயிஸ் பிரெயில் என்பவர் பார்வையற்றவர்களுக்குத் தடவிப் பார்த்துப் படிக்க ஏற்ற பிரெய்லி எழுத்துகளைக் கண்டுப்பிடித்தவர். இவரைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.



**பெயர்** – **லூயிஸ் பிரெயில்**

**பிறப்பு** – **04.01.1809**


**இறப்பு** – **06.01.1852**

**ஊர்** - **பிரான்சு**

லூயிஸ் பிரெயில் தன் மூன்றாவது வயதில், தன் கண்களை இழந்தார். காயம்பட்ட கண்களுக்குச் சரியான மருத்துவம் இல்லாததால் அவர் பார்வை

இழக்க நேரிட்டது. பாரிசில் உள்ள Royal Istitute for Blind Youth எனும் பார்வைத்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான பள்ளியில் சேர்ந்தார்.

இந்தப் பள்ளியில் பார்வைத்திறன் குடைபாடுடையவர்கள் படிப்பதற்கு ஏற்ற நூல்களை உருவாக்கி இருந்தனர். இந்த நூல்களில் உள்ள எழுத்துகள் சாதாரண நூல்களை விட சற்று மேடாக அச்சிடப்பட்டிருக்கும். எழுத்தின் வடிவத்தை உணர்ந்து படிக்க வேண்டும். இதைப் படிப்பதற்கு அதிக நேரம் எடுப்பதோடு நூல் கனமானதாகவும் இருந்தது.




பிரெஞ்சு ராணுவம் பயன்படுத்திய Night Writing பிரெய்லி முறையிலிருந்து,

எளிமைப்படுத்தியது தற்போதைய பிரெய்லி எழுத்து முறை.

இராணுவத்தில் போர் முனையில் இரவு நேரத்தில் சிப்பாய்களுக்கு வழங்கப்படும் தகவல்களை நெருப்பில்லாமல் படிக்கப் பயன்படுத்தப்பட்ட முறைதான் நைட் ரைட்டிங் முறை. இதில் காகிதத்தில் புள்ளிக் புடைத்து மேலெழும்பி இருக்கும் ஒவ்வொரு வரிசையில் அமையும் புள்ளிக்கும் ஒவ்வொரு எழுத்துகள் குறியீடாகக் கொடுக்கப்பட்டிருக்கும். இது 12 புள்ளிகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. அதனை லூயி முழுவதும் கற்றார். இந்த முறையும் கடினமாக இருப்பதாக எண்ணிய லூயிஸ் 6 புள்ளிகளைக் கொண்டு 63 விதமான சேர்க்கையில் புதிய முறையை அறிவித்தார்.



19ஆம் நூற்றாண்டில் பிரெய்லி முறை உலகமெங்கும் பயன்படுத்த ஆரம்பிக்கப்பட்டது. பிரெய்லி நூல்கள் மட்டுமல்லாமல் பிரெய்லி டைப்ரைட்டர், பிரெய்லி கீபோர்டு போன்றவை பார்வைத்திறன் சவால் உடையவர்கள், நாள்தோறும் வாழ்க்கையில் பயன்படுத்துதற்கு ஏற்ற முறையில் மிகவும் வசதியாவும் எளிமையாவும் இருந்தன.

இரண்டு நூற்றாண்டுகள் கடந்து இன்றும் காலண்டர், ஏடிஎம், நூல்கள் என மக்கள் பயன்படுத்தும் அதே வசதிகளை யார் உதவியும் இல்லாமல் பார்வைத் திறன் சவால் உடையவர்களும் பயன்படுத்த முடியும் என்ற அளவிற்கு முன்னேற்றம் ஏற்ப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் பிரெய்லி கண்டறிந்த கற்றல் முறையே ஆகும். இவரது பிறந்த நாளை உலக பிரெய்லி நாளாகக் கொண்டாடி வருகின்றனர்.


**த. பிரியங்கா, இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு**

# நூல் அறிவோம்

நூலின் பெயர் : இதயத்தில் பூத்த நெருஞ்சிப் பூக்கள்

நூலாசிரியர் : கவிஞர் நாயகி

வெளியீடு : வள்ளுவர் புத்தக நிலையம்




இதயத்தில் பூத்த நெருஞ்சிப் பூக்கள் எனும் கவிதை வடிவிலான நூலின் முதல் பதிப்பு 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆகும். இவற்றின் உரிமை வள்ளுவர் புத்தக நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தன் பேனாவைப் பேராயுதமாகக் கொண்டு சமூகத்தில் நிகழும் இன்னல்களை வெட்டிச் சாய்க்கிறார் நூலாசிரியர்.

இந்நூலில் 12 தலைப்புகளில் கவிதைகளை எழுதியுள்ளார்.

அவை

- தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்
- இதயத்தில் பூத்த நெருஞ்சிப் பூக்கள்
- தைரியம் கொள் பெண் காவலரே
- பலியாடுகள் நீயும் நானும் தான்
- விதவையின் விழிகள்
- வறுமையின் நிறம் சிவப்பு
- காப்பகத்தினுள் ஓர் பிஞ்சின் குரல்
- உழைப்பும் ஊதியமும்
- தெவிட்டாத நல்லுறவு
- அவல் தீர்ப்போ தற்கொலை?
- கருப்பையின் கதறல்
- பனித்துளியும் அதன் ஆயுளும்

இந்நூலுக்கு வள்ளுவர் பேரவை நிறுவனத் தலைவர் மெ.செயம்கொண்டான் மதிப்புரை வழங்கியுள்ளார். வள்ளுவர் வாசகம் வட்டம் உறுப்பினர் பா. அருணகிரி வாழ்த்துரை வழங்கியுள்ளார். இந்தக் கவிதை நூலில் வரும் கவிதைகளில் இடம் பெற்ற பல வரிகள் என் மனதைக் கவர்ந்தன. அதில் ஒன்று இதயத்தில் பூத்த நெருஞ்சிப் பூக்கள் என்னும் தலைப்பில் பெண்குழந்தைப் பற்றிய கவிதை. அதன் இறுதியில் இடம்பெற்ற

**பெண்பிள்ளையை**

**எப்படிக் காப்பேன்?**

**பச்சிளம் பிஞ்சினை**

**முதன் முதலில் கையில் ஏந்திய**

**தகப்பனின் இதயத்தல் பூத்த**

**நெருஞ்சிப் பூக்களை**

**யார் களைவார்?**

என்று இந்தப் பாதுகாப்பற்ற சமூகத்தில் எவ்வாறு தன்மகளைப் பாதுகாப்பேன் என்று ஒரு தந்தையின் மனவலியை மிக அழகாகக் கூறியிருப்பார். இவ்வாறு ஒவ்வொரு தலைப்பிலும் ஒவ்வொரு அர்த்தத்தையும் வலியையும் நமக்குக் கவிஞர் நாயகி வழங்கியிருப்பார். இந்நூல் பெண்ணின் உணர்வுகளையும் சமுகத்திற்குத் தேவைப்படும் மாற்றங்களையும் உழைப்புச் சுரண்டலையும் நமக்கு இனிய நடையாம் கவிதையில் எடுத்துரைக்கிறது.

**மா. ஜெகதீஸ்வரி, முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு**

# பழமொழி நுண்பொருள்

### முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப் போல

தன் தகுதிக்கு மீறிய செயல்களை ஒருவன் செய்யும் போது முடவன் கொப்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப் போல என்று பழமொழிக் கூறுவர். இது இன்றைய காலக்கட்டத்தின் வழக்கு ஆகும்.



### முயலான் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதைப் போல



முயலான் அதாவது முயற்சி செய்யாதவன் கொப்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல என்பதே சரியான பதம். கொப்புத் தேன் மலை உச்சியில் இருக்கும். அதனை முயற்சி இல்லாமல் இருப்பவன் பெறுவது அறிது.

# அறிவியல் செய்திகள்

## வானவில்

மழையும் வெயிலும் எதிர் எதிர் துருவங்கள் ஒன்று இருக்கும் போது மற்றொன்று இருக்காது. வெண்மை நிறம் என்பது சிவப்பு, பச்சை, நீல நிறங்களின் கலவையாகும். கண்ணாடியின் விளிம்பு,



சோப்பு நுரைக் குழிழ் இவற்றில் ஒளி படும் போது வெண்மை நிறம் மாறி நிறப்பிரிகை ஏற்பப்ட்டு ஏழு நிறங்கள் உடைய ஒளிப்பட்டையைப் பார்க்க முடியும்.



நீர்த்துளிகளால் சூரிய ஒளி விலகல் அல்லது வளைதலால் வானவில் ஏற்படுகிறது. எப்போது வானவில்லைக் கண்டாலும் அதன் வண்ண அமைப்பு ஒரே சீராக

இருக்கும். வானவில் வட்ட வடிவமானது. ஆனால் நம்மால் அரை வட்டத்தை மட்டுமே பார்க்க முடியும். விமானம் அல்லது மலை உச்சியில் இருந்து பார்க்கும் போது முழு வட்டத்தையும் பார்க்க முடியும். ஒளியில் அதிகத் துள்ளல் ஏற்படும் போது இரட்டை வானவில் தோன்றுவதும் உண்டு.

வானவில்லின் தோற்றம் சூரியன் மற்றும் மழையை ஒப்பிடும் போது பார்வையாளரின் நிலை நிற்கும் இடத்தைப் பொறுத்து வேறுபடும்.

சிவப்பு மூலாதார சக்தி – அன்பு, கோபம், ஆரஞ்சு துடிப்பு மிக்க ஆற்றல் – பாசத்தின் நுட்பமான தன்மை, மஞ்சள் மகிழ்ச்சி, அமைதி, பச்சை நிறம் – வாழ்வாதாரத்தின் நிறம், நீலம் – மன அமைதி, கருநீலம் – பௌர்ணமி இரவின் நிறம், ஆழ்மனம், ஊதா நிறம் – ஆன்மீகப் பாதை என ஒவ்வொரு நிறத்திற்கும் உளவியலில் கருத்துகள் கூறப்படுகின்றன.



## பண்டிகை வரலாறு

## நாட்டியாஞ்சலி நடன விழா

நாட்டியாஞ்சலி நடன விழா, புகழ்பெற்ற தமிழ்நாட்டு விழாவாகும். நாட்யா என்றால் நடனம், அஞ்சலி என்றால் பிரசாதம் என்று பொருள். கடவுளுக்கு நடனத்தைக் காணிக்கையாகச் செலுத்தும் நிகழ்வு ஆகும். இது நடராஜர் அல்லது சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட நடன விழாவாகும், இது தமிழ்நாட்டின் சிதம்பரத்தில் உள்ள நடராஜர் கோயிலில் ஆண்டுதோறும் மகாசிவராத்திரி நாளில் கொண்டாடப்படுகிறது.



இந்த நாட்டியாஞ்சலி விழா ஐந்து நாட்கள் கோயிலின் மைதானத்தில் நடைபெறும். பரத நாட்டியம், குச்சுப்புடி,

மோகினியாட்டம், ஒடிசி, கதக், கதகளி உள்ளிட்ட பல்வேறு இந்திய நடனங்களை ஒரே இடத்தில் பார்க்க முடியும்.



பல்வேறு பண்பாடுகளைச் சேர்ந்த குறைந்தது 7000த்திற்கும் மேற்பட்ட நடனக் கலைஞர்களை ஒன்றிணைத்து, இந்திய மக்களிடையே ஒற்றுமையின் செய்தியை இந்த விழா வலுப்படுத்துகிறது.

தற்போது தஞ்சாவூர், திருநள்ளாறு, நாகப்பட்டினம், கும்பகோணம், மாயவரம் திருவானைக்கோயில், சென்னை, உள்ளிட்ட நகரங்களில் உள்ள சுற்றுலாத் தலங்களில் நடத்தப்படுகிறது.




நாட்டியாஞ்சலி நடன விழா பிப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் கொண்டாடப்படுகிறது

**மோ. ஐஸ்வரியா, முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு**

# பொன்மொழிகள்

வெற்றிபெற வேண்டும் என்ற

பதற்றம் இல்லாமல் இருப்பது தான்

வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி

- டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம்

உண்மை என்பது வெளியில்

இருக்கும் ஏதோ ஒன்றைக் கண்டுபிடிப்பதல்ல

உள்ளுக்குள் இருக்கும் ஒன்றை உணர்வது.

- ஓசோ

அதிகாலை நீ நினைத்த நேரத்தில்

எழுந்துவிட்டாலே தோல்விகள்

உன்னைவிட்டு ஒதுங்கிக் கொள்ளும்.

- டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம்

**சு. சரண்யா**

**முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு**

# சிறுகதை

## நம்பி கெட்டவள்

ஒரு ஊரில் சுந்தரம், காளியம்மாள் என்ற கணவன் மனைவி வசித்து வந்தனர். அவர்களின் மகள் விஜயா. இவர்கள் மிகவும் வசதியான குடும்பத்தவர்கள். விஜயாவை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தனர்.



விஜயா பள்ளிப்படிப்பை நன்றாகப் படிக்கவில்லை. ஆசிரியர் கண்டித்து அடித்துவிட்டார்.

இதனை அறிந்த விஜயாவின் பெற்றோர் கோபத்துடன் நானே என் மகள் மீது கை வைத்ததில்லை நீங்கள் யார் என் மகளை அடிக்கிறதற்க்கு என்று சொல்லி தன்மகளைப் பள்ளிக் கூடத்தைவிட்டு நிறுத்தினர்.

அப்பாவின் பாசம் மகளின் வாழ்வை முடக்கியது.

பதினைந்து வயது வரைக்கும் வீட்டில் இருந்தாள். பிறகு அங்கே கட்டிடவேலை செய்யும் கண்ணனைக் காதல் செய்தாள். நம் வீட்டில்

சொன்னால் எங்கே ஒத்துக்க மாட்டாங்களோ என்று எண்ணி இருவரும் கல்யாணம் செய்து ஊரைவிட்டு சென்றார்கள். பிறகு சில வருடம் சந்தோசமாகத்தான் வாழ்ந்தார்கள். இவர்களுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது.

குழந்தை பிறந்து இரண்டு வருடங்கள் வரை தன் மனைவியின் கூடவே வாழ்ந்தான் கண்ணன். பிறகு அவன் வேலை செய்யும் இடத்தில் ஒரு பெண்ணிடம் பழக்கம் ஏற்பட்டு விஜயாவை விட்டு விட்டு அந்த பெண்ணை திருமணம் செய்துக் கொண்டான் கண்ணன்.

மனம் உடைந்து போனாள் விஜயா. நம் கையில் ஒரு பச்சை குழந்தை இருக்கிறது. நம் வீட்டிற்குப் போனாலும் நம்மைச் சேர்த்துக்கமாட்டாங்க என்று எண்ணுகிறாள்.

அடுத்து என்ன என யோசிக்க ஆரம்பித்தால், அன்றாடம் பிழைப்பிற்கு வேலைக்குச் சென்றே ஆக வேண்டும்.

வேலை தேட ஆரம்பித்தாள். இந்த இடத்தில் தான் அவள் படிக்காததன் விளைவை உணர்ந்தாள். படித்திருந்தால் நல்ல வேலைக்குச் சென்றிருப்பேன். இப்போது நானும் கட்டிட வேலைக்குத் தான் செல்ல வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

என்ன கடவுளே எனக்கு வந்த சோதனை நான் படித்திருந்தாள் இவ்வளவு கஷ்டங்களை பட வேண்டிய அவசியம் ஏற்ப்பட்டது இருக்காதே என்றும் நான் தான் எவனையோ நம்பி என் வாழ்க்கையை இப்படி ஆகிவிட்டேன். என் குழந்தையை நான் நன்றாகப் படிக்கவைக்க வேண்டும் என்று வைராக்கியத்துடன் வாழ்ந்தாள். பல போராட்டங்களுக்கிடையில் நன்றாகவும் படிக்க வைத்தாள். குழந்தையும் நன்றாகப் படித்தது.

படிப்பறிவு மட்டுமே நம்மைச் சுயமாக யோசிக்கவும், முன்னேறவும் உதவும். நாம் எடுக்கும் முடிவும் தெளிவானதாக இருக்க கல்வி அவசியம். நம்பியவன் ஏமாற்றினாலும் நாம் கற்ற கல்வி நம்மை உயர்த்தும் என்ற நம்பிக்கையைக் கொடுப்பது கல்வி.

கொடுக்கக் கொடுக்க வளரும் செல்வம் கல்வி. பகுத்தறிவைக் கொடுக்கும் செல்வம் கல்வி. பெண்களுக்குக் கட்டாயம் கல்வி அவசியம். கற்போம். உயர்வோம். உயர்த்துவோம்.

**வ. உமாமகேஸ்வரி**

**இளங்கலைத் தமிழ், இரண்டாமாண்டு**

# கவிதை

## மனசாட்சி

உடல் உருவத்தை ஒளிக்கும்
உன் நிழலை விட ....
உள் உணர்வை ஒலிக்கும்
உன் அகமொழியைக் (மனசாட்சியைக்) கேள்
நீ யார் என்று கூறும் !....
ஏனென்றால்
நீ செய்யும் நன்மை தீமை
எதுவாயினும் அதை முதலில்
அறிவது உன் மனம் தானே!

**பா. லோகேஸ்வரி, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு**

## குறளினை ஓது

ஈரடியினிலே ஏழ்கடல் புகுத்தி
பார்ரெங்கும் வியக்கப் பாத்தொடுத்தார்
பரந்த உலகிற்குச் சிறந்தநெறி சொல்ல
தமிழ்மகள் துணையுடன் குறள் தந்தார்!

அறம் பொருள் இன்பம் மூன்றிலும்

அழகிய வைரங்கள் பொதித்து வைத்தார்!

தமிழா விழித்தெழு!

உலகிற்கே மறைதந்த நாவலரை.

நெஞ்சில் வை!

அவர் தந்த அருந்தமிழ்

குறட்பாக்களை நாவில்வை!

வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும்

தமிழ்மறையை நீ ஓது!

செருக்கோடு தமிழனென்று!

தலை நிமிர்ந்து நிற்க

குறளினை நீ ஓதிவர,

துன்பமுண்டோ! நம் வாழ்வில்,

பாதைதான் அவர் தந்தார்.

பின் பற்றி நடக்க.

தயக்கம் ஏன் உன் வாழ்வில்?

**மோ. ஐஸ்வரியா, முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு**

## கவிதை

தமிழ் மொழி கவிதை இல்ல
ஒப்புக் கொள்கிறேன்
நீ வாசிக்காத தமிழ் மொழி எதுவும்
கவிதை அல்ல
வாசித்துப் பார்
தமிழைத் தவிர வேறு எதுவும்
கவிதை இல்லை என்பது புரியும்

**பா. ரேஷ்மா,**

**இளம் வணிகவியல், மூன்றாமாண்டு**

## நான் விரும்பும் நூல் திருக்குறள்

அகர முதல எழுத்தில் தொடங்கி
அகில உலகை ஆளும் பாவலர்!
நான் விரும்பும் நூல் திருக்குறள்
அதை எழுதியவர் திருவள்ளுவர்
இருவரியில் வரைந்த வாழ்வு நெறி!

பிறழாது வாழ்வோம் அந்நெறியின் வழி!

முப்பாலில் ஆன நல்வழி காட்டி!

தப்பாது நடப்போம் அவ்வழி ஒட்டி!

நூற்று முப்பத்து மூன்று அதிகாரம்

உரைக்கும் உற்ற உபதேசம்!

கற்றுத் தெளிந்து வாழ்ந்திடுவோம்

வாழ்வில் நிறையும் சந்தோசம்!

திருக்குறளை நாளும் ஓதிடுவோம்!

வாழ்வில் உயர்ந்து ஓங்கிடுவோம்!

ஆறடியில் புதையும் மானிட வாழ்க்கையை

இரண்டடியில் உலகிற்கு


எடுத்து உரைத்த வள்ளுவா!

நீ எழுதிய நூல் அருமை!

அதை நாங்கள் படிப்பது பெருமை!

**எஸ். வரலட்சுமி, இளமறிவியல் கணினியியல், இரண்டாமாண்டு**

# தூரிகைத் தூரல்கள்




ரா. ஷாமிலி, தகவல் தொழில் நுட்ப மேலாண்மையியல்




த. எழிலரசி, இளங்கலை ஆங்கில இலக்கியம், மூன்றாமாண்டு




பா. சந்தியா

கணினிப் பயன்பாட்டியல்,


முதலாமாண்டு

## துறை நிகழ்வுகள்


GPS Map Camera
Chennai, Tamil Nadu, India
45HQ+R2R MAIN BLOCK, SOKA IKEDA COLLEGE OF ARTS AND SCIENCE FOR WOMEN, Andal Kovil Main Rd, Mugambigai Nagar, Madura Madanan Kuppam, Chennai, Tamil Nadu 600053, India
Lat 13.129562°
Long 80.187711°
08/01/24 12:11 PM GMT +05:30
பாரதி உலா - 08.01.2024


பாரதி உலா
08.01.2024
GPS Map Camer


தேசிய இளைஞர் நாள்
போட்டிகள் - 12.01.2024



வெளியனுபவச்
செயல்பாடு
GPS Map Camera
hennai, Tamil Nadu, India
94+G2M Girls higher school, N Park St, Venkatapuram, Ambattur, Chennai,
mil Nadu 600053, India
t 13.118443°
ng 80.154827°
/01/24 09:44 AM GMT +05:30
GPS Map Camera
Chennai, Tamil Nadu, India
4594+G2M Girls higher school, N Park St, Venkatapuram, Ambattur, Chennai,
Tamil Nadu 600053, India
Lat 13.118614°
Long 80.154817°
18/01/24 10:13 AM GMT +05:30
Google
18.01.2024


திருக்குறள் விழா - போட்டிகள் - 15.02.2024
GPS Map Camera
Chennai, Tamil Nadu, India
127, Water Canal Rd, Varasakthi Nagar, Korattur Tank, Lakshmipuram, Chennai, Puthagaram, Tamil Nadu 600080, India
Lat 13.128499°
Long 80.192563°
15/02/24 10:39 AM GMT +05:30
Google
GPS Map Camera
Chennai, Tamil Nadu, India
45HP+RQ5, Mugambigai Nagar, Madura Madanan Kuppam, Chennai, Tamil Nadu 600053, India
Lat 13.129464°
Long 80.187674°
15/02/24 01:12 PM GMT +05:30
Google


21.02.2024
உலகத் தாய்மொழி நாள்
பயிலரங்கம்
GPS Map Camera
Chennai, Tamil Nadu, India
45HP+RQ5, Mugambigai Nagar, Madura Madanan Kuppam, Chennai, Tamil Nadu 600053, India
Lat 13.129256°
Long 80.187564°
21/02/24 11:18 AM GMT +05:30
Google


அகழ்
ஆய்வரங்கம்
24.02.2024


உலக மகளிர் நாள் கருத்தரங்கம் - 08.03.2024


விதை - 15.03.2024
GPS Map Camera
Chennai, Tamil Nadu, India
45HP+RQ5, Mugambigai Nagar, Madura Madanan Kuppam, Chennai, Tamil Nadu 600053, India
Lat 13.129304°
Long 80.187618°
15/03/24 11:41 AM GMT +05:30
Google


ஸ்ரீபுரம்
GPS Map Camera
கல்விச் சுற்றுலா – 28.03.2024
GPS Map Camera

தமிழால் தழைக்கும் உலகு

# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய மின்னிதழ்




தமிழ்த்துறை
சோகா தமிழ்ப் பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

044-26863177, 9677717456, 9677717456

sokatamilavai2023@gmail.com
sokaikeda2000@gmail.com